Bifurcated Course.

* 206 *Q.*—THIRU S. S. THENNARASU (on behalf of Thiru K. Arivazhagan): Will the Hon. the Minister for Education be pleased to state—

(*a*) the number of schools in the State declared as comprehensive schools;

(*b*) whether the S.S.L.C. level Secretarial Practice and Book-keeping will be made equivalent to Higher Technical Examination conducted by the Directorate of Technical Education;

(*c*) whether it will be extended to typewriting also; and

(*d*) whether there is any proposal to revise the syllabus for Secretarial Practice and Book-keeping under the Bifurcated Course?

இரு கூறாக்கப்பட்ட பாட முறை.

திரு. எஸ். எஸ். தென்னரசு (திரு. க. அறிவழகன் சார்பில்): மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் அடங்கல் பள்ளிகளாக அறிவிக்கப்பட்ட பள்ளிகள் எத்தனை ?

(இ) பள்ளி இறுதித் தேர்வு அளவில் செயலகப்பணிக் கல்விப் பயிற்சி, கணக்கு வைப்புப் பயிற்சி ஆகிய பாடங்கள், தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அலுவலகத்தால் நடத்தப்படுகின்ற உயர் தொழில் நுட்பத் தேர்வுக்குச் சமமானதாக ஆக்கப்படுமா ?

(உ) இவ்வாறு உயர் தொழில் நுட்பத் தேர்வுக்குச் சமமாகக் கருதப் படும் இச்சலுகை தட்டச்சுத் தேர்வுக்கும் நீட்டிக்கப்படுமா ?

(எ) இரு கூறாக்கப்பட்ட பாட முறையின் கீழ் செயலகப் பணிக்கல்விப் பயிற்சி, கணக்கு வைப்புப் பயிற்சி ஆகியவற்றின் பாடத் திட்டத்தைத் திருத்துவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 19.

(இ), (உ) & (எ) : இருமுனைப் பாடத்திட்ட பாடங்களில் ஒன்றாகிய "அலுவலக நடைமுறை" (**Secretarial Practice**) என்னும் பாடத்தை **10, 11** வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் பயில வேண்டிய

1975 மார்ச் 29.]

தட்டச்சு, வணிகக் கணக்கியல் (Book-Keeping) முதலிய பல பாடங்களில் தட்டச்சு என்னும் பாடத்தின் தகுதி மட்டும் 1974-75-ம் ஆண்டு முதல் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் நடத்தும் "அரசு தொழில் கல்வி பரிட்சையில்" தட்டச்சு ஹையர் பரிட்சைக்குச் சமமாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது. வணிகக் கணக்கியல் என்னும் பாடத்தின் தகுதியில் மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை. அதற்கான பாடத் திட்டத்தை மாற்றும் ஆலோசனையும் இல்லை.

Vasectomy Operation

*207 Q. THIRU P. R. THOMAS (on behalf of Thiru K. S Ganapathi): Will the Minister for Health be pleased to state:

(a) whether it is a fact that a Vasectomy Operation was performed on a mentally unsound bachelor in the Krishnapuram Government Hospital in Tiruchirappalli District;

(b) whether the Collector of Tiruchirappalli has conducted an enquiry through the District Family Planning Maternity and Child Health Officer, at Tiruchirappalli in this case; and

(c) if so, the details thereof?

"வாசக்டமி" அறுவை சிகிச்சை.

திரு. பி. ஆர் தாமஸ் (திரு கே. எஸ். கணபதி சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) திருச்சிராப்பள்ளி மாவட்டம் கிருஷ்ணபுரம் அரசினர் மருத்துவ மனையில் புத்தி சுவாதீனமற்ற பிரம்மச்சாரி ஒருவருக்கு "வாசக்டமி" அறுவை சிகிச்சை செய்யப்பட்டதென்பது உண்மையா ?

(இ) இந்நேர்வில், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சிராப்பள்ளியிலுள்ள மாவட்ட குடும்ப நலத் திட்ட மகப்பேறு சிறுர்நல அதிகாரி மூலம் விசாரணை ஒன்றை நடத்தியுள்ளாரா ?

(உ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) ஆம்.